
# ஆழ்கடலில் மீனவனின் பாதுகாப்பு எம் அனைவரினதும் கடமையாகும்



தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்கடலில் மீனவனின் பாதுகாப்பு :- எம் அனைவரினதும் கடமையாகும்

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வெளியீட்டு இலக்கம் - 22
ISBN இலக்கம் - 955 8103 -09 8
முதல் வெளியீடு 2007 ஜனவரி

| | | |
|---|---|---|
| பிரதான பதிப்பாசிரியர் | - | ஹர்மன் குமார |
| உதவி பதிப்பாசிரியர்கள் | - | கீதா லக்மினி<br>கயான் அபேகொட,<br>சமித் ரொசான் |
| மொழி பெயர்ப்பு | - | அன்டனி யேசுதாசன் |
| கணனிமயமாக்கம் | - | ரிஸ்மியா பசீர் |
| சித்திர நிர்மானம் | - | பிரியன்த சில்வா |
| அச்சிடல் | - | சமகி அச்சகம், 323, கொழும்பு வீதி, |

| | | |
|---|---|---|
| விலாசம் | - | தேசிய மீனவ ஒத்துழைப்பு<br>இயக்கம், இல.10,<br>மல்வத்த வீதி, நீர்கொழும்பு. |
| தொ.பேசி | - | ++94 31 - 2239750<br>++94 31 4 - 872692 |
| பக்ஸ் | - | ++94 31 4 - 870658 |
| Email | - | <fishmove @ slt.lk> |
| Web Site | - | < www.nafsoone.blogspot.com> |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது விதியை
# நாமே தீர்மானிப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை :-

- இக் கையேடு மீனவ சகோதரர்களுக்காகவே எழுதப்பட்டுள்ளதோடு, அவர்களின் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

- அதோடு ஒவ்வொரு நாளும் மீனவர் கடலுக்கு போய் பாதுகாப்பாக மீண்டும் வீடு திரும்புவதை உறுதிப்படுத்தும் காரணிகளும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது.

- இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள காரணிகளை வாசித்தறிந்து உமது குடும்ப அங்கத்தவர்களோடு மற்றும் நண்பர்களோடு பகிர்ந்து மீனவர் உங்கள் வாழ்க்கையை உறுதி செய்வது சகலரதும் கடமையாகும்.

- இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள காரணிகள் உங்களுக்கு தெளிவில்லையெனில் உங்கள் குடும்ப அங்கத்தவர்களிடம் அல்லது நண்பர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள காரணிகளை தெளிவாக புரிந்துக் கொள்ளுதல் மிக முக்கியமாகும்.

- உங்கள் வாழ்க்கையின் நிலைப்பாடை உறுதிசெய்வதற்காக உங்கள் படகுகளில் மேற்கொள்ள வேண்டிய மேலதிக செயற்பாடுகள் மற்றும் தேவையான மாற்றங்களுக்கு உரிய நடைமுறைகளை இன்றே எடுங்கள்.

**விதி தொடர்பாக ஒரு வார்த்தை!**

கடந்த காலங்களில் மீனவர்கள் இளம் வயதில் கடலில் இறந்து போவது அல்லது காணாமல் போவது தங்கள் தலை விதி என நினைத்தார்கள். அதற்கு காரணம் கடற்றொழிலில் ஈடுபடும் போது பாதுகாப்பு தொடர்பாக எமது கவனம் செலுத்தப்படாமையும், அவ்வாறான விபத்துக்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு நாம் அக்கறை காட்டாமையாகும். அதிக நேரம் எமது பாதுகாப்பு எம் கைகளிலேயே தங்கியுள்ளது. படகை மோறா மீன் ஒன்று தாக்குவதனால் அங்கு அமிழ்வதை தடுக்க முடியாது. ஆனாலும் இவ்விபத்தினால் ஏற்படும் பாரிய விளைவுகளை குறைத்துக்கொள்வதற்கான செயல்முறைகளை எம்மால் மேற்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு எமது அறிவாற்றல் இன்மையால் எமது விதியை அவதானத்திற்குரிய ஒரு விடயமாக நாமே மாற்றுகின்றோம். எமது அறிவு தெளிவை வளர்த்துக்கொள்ளல் மற்றும் ஆழ்கடலில் விசேட விதமாக செயற்படும் விதங்கள் தொடர்பான ஆயத்தத்தோடு தொழிலுக்கு செல்லும் போது எமது பாதுகாப்பை நாமே உறுதி செய்து கொள்ள முடியும். மீனவர் எமது தலைவிதியை எம்மால் மாற்ற முடியும் என்பதை புரிந்து கொள்வது மிக முக்கியமாகும்.

**வாழ்வை மாற்றுதல்:-**

வளங்களின் மலிவுத்தன்மை, அழிவுத்தன்மை மற்றும் சூழல் அழிவை குறைத்து, வளங்களின் மேல் செலுத்தும் அமுக்கத்தை குறைத்ததன் மூலம் ஆரம்ப காலங்களில் மீனவர்கள் தங்களுக்குத் தேவையான மற்றும் தம் குடும்பத்தை வழிநடத்துவதற்கு தேவையான மீன் தொகையை கரையை அண்டிய பகுதிகளிலேயே பிடித்தார்கள்.

- இங்கு கரையை அண்டிய பிரதேசங்களிலேயே மீன் பிடிப்பதற்கு உகந்ததாக படகுகள் தயாரிக்கப்பட்டன.

மேல் ஆழமற்ற கடல் பிரதேசத்தில் மீனவ படகுகளையே பாவித்து கடல் தொழிலில் ஈடுபட்டதால் தற்கால மீனவ சமூகத்திற்கு மீன்பிடிக்க உகந்த தன்மை இல்லாத படகுகளை பாவித்து ஆழ்கடழ் பிரதேசங்களுக்கு செல்ல வேண்டி உள்ளது.

தத்தம் கடல் எல்லைகளில் தம்மாலேயே அனுமதிக்கப்பட்டுள்ள மீனவ செயற்பாட்டு செயல்கள் மட்டும் செயற்படுத்தப்படுகிறது என்பதை சகல அரசுகளும் தெரிந்திருக்க வேண்டும் என்பதோடு, அவ்வாறான செயற்பாடுகள் பொறுப்பு மிக்கதோடு செயற்படுத்தப்படுகிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
(8.1:1 உறுப்புரை)

மீனவ செயற்பாட்டு செயல்கள்:-
பொறுப்பு மிக்கதான மீனவ தொழிலுக்கான ஒழுங்கு விதிமுறைகள்
உணவு மற்றும் விவசாய அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைப்பாடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கரையை அண்டிய பிரதேசத்தில் நீர் அலைகளுக்கு ஒத்ததாக சிறிதாவதோடு, அலைகள் பெரியதாகி கடலில் விழுவதால் உயிருக்கு அபாயம் ஏற்பட்டால் மிதத்தலால் அல்லது கரையை நெருங்க முடியும்.

- சம்பிரதாய தோணி மற்றும் நீளமான வடிவை உடைய படகுகள் அவைகள் தூரக்கடலில் பாவனைக்கு பொருத்தமற்றது என்றபடியால் அவைகள் நிலையற்றதாகும்.

- உமக்கு புதிய படகு ஒன்று கிடைத்தால் அல்லது விலைக்கொடுத்து வாங்கினால் அது பழைய படகைவிட அகலத்தில் கூடியது என்பதை உறுதிப்படுத்துங்கள்.

- இந்த அனுபவம் மற்றும் அறிவை ஒன்றுதிரட்டிய அதிகமான பாரம்பரிய மீனவர்களுக்கு மீனவ தொழில் தொடர்பான அனுபவம் குறைவாகும்.எனவே தற்காலத்தில் கடலுக்கு செல்கின்ற மீனவர்கள் தமது தொழிலில் ஈடுபடுவது தேவையான ஆயத்தம் இல்லாமல் ஆகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதற்கு காரணம்,**

- பொருத்தமற்ற படகுகளில் பயணிப்பது.
- தரம் குறைந்த பொருட்களினால் படகுகளை உற்பத்தி செய்தல்.
- தமது தந்தையர்களின் அல்லது பெரியோர்களின் அறிவை பெற்றுக் கொள்ளாமை.
- இன்னும் சில சந்தர்ப்பங்களில்சில இளைஞர்கள் மீனவ தொழில் தம் குடும்பத்தின் தொழிலாக இல்லாமலிருந்த போதும் மீனவ தொழிலில் ஈடுபடுவது. ஆகவே தான் அவர்களுக்கு கடந்த கால தொழில் அனுபவங்களை பெறுவதற்கு அவர்களின் குடும்பங்களில் மீனவ அனுபவமுள்ள பெரியோர்கள் இல்லை.
- மீனவ தொழில் தொடர்பான அடிப்படை அறிவு இல்லாத மீனவ பிரதேசமற்ற நபர்கள் பல்தின படகுகளில் தொழிலில் ஈடுபடுகின்ற படியினால் அவர்களுக்கு அனுபவம் குறைவு. எனவே தான் இப்புத்தகத்தை தயாரிப்பதன் முக்கியத்துவத்தை நாம் கண்டறிந்தோம்.

"கல்வி மற்றும் பயிற்சி செயற்பாடுகளுடாக மீனவர்களின் திறமையை மேம்படுத்துவதற்கு செயற்பாடுகளை மேற்கொள்வதைப் போன்றே, பொருத்தமான சந்தர்ப்பங்களில் தொழில் தகமைகளை மேம்படுத்த செயற்பட வேண்டும். இந்நிகழ்ச்சித்திட்டங்களை சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ள முறைமை மற்றும் ஆலோசனைகளுக்கேற்ப தயார் படுத்த வேண்டும்.

8.1.7 உறுப்புரை
சகல அரசகளினதும் பொறுப்பு:
பொறுப்பு மிக்க மீனவ தொழிலுக்கான ஒழுங்கு விதிமுறைகள்.
உணவு மற்றும் விவசாய அமைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனவ சகோதரர்களாகிய தங்களது வாழ்க்கை, வாழ்க்கை வழி மற்றும் தொழில் செய்யும் உரிமையை உறுதி செய்வது எமது பிரதான இலக்காகும்.

**எனவே,**

- உமது படகில் இயந்திர (என்ஜின்) அறை அல்லது சக்கர அறை ஒன்று இருந்தால் அவைகள் அலைகளுக்கு அகப்படாத வண்ணம் மேல் பகுதியில் தயாரிக்க உறுதி செய்ய வேண்டும்.

- அவைகளின் கதவுகள் நீரில் ஒழுகல் ஆகாத வண்ணம் மறைத்தலை உறுதி செய்ய வேண்டும்.

- படகில் யன்னல் இருந்தால் அவைகள் நன்றாக மூடக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

- சம்பிரதாய படகுகளின் துடுப்பு தேவையான நிலைப்பாட்டை பெற்றுக்கொடுக்கும்.

- புதிய படகுகளை ஈடுபடுத்துவதற்கு முதலில் ஆழமற்ற கடல் பிரதேசத்திலேயே படகின் பொருத்தற்தன்மையை மீனவரால் பரிசீலிக்க வேண்டும்.

இக் காரணிகள் இலகுவாக மற்றும் வசதியாக செய்ய முடியுமான காரணிகளாக உள்ளது என்பது தெளிவாகிறது. ஆனாலும் மிக இலகுவான படியால் மற்றும் கவனயீனத்தன்மையால் உயிராபத்துகளை ஏற்படுத்துவதிலிருந்து தப்பித்துக்கொள்ளுதல் என்பது உங்கள் பொறுப்பாகும். படகு தயாரிப்பு, படகு பயன்பாடு மற்றும் சரியான கவனத்தோடு கடல் பயணத்தின் அபாய நிலையை குறைப்பதற்கு உறுதி செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதத்தல்
# Boyancy

"திடீர் சந்தர்ப்பம் ஒன்றில்
கடலில் மூழ்காமல் மிதப்பதற்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெரிய படகுகளின் யன்னல்களை நன்றாக மூடுவதற்கான தேவை உள்ளது. அதனூடாக வாயுவை (வளியை) தங்க வைத்துக் கொள்வதன் மூலம் மிதப்பதற்கு இலகுவாயிருக்கும். அவ்வாறே (உள்பாகம்) உள்ளகத்தை தயாரித்துள்ள படகுகள் மூலம் திடீர் அலைகளால் மூழ்கிபோகாமல் மிதப்பதற்கு தேவையான வசதியை பெற்றுக்கொள்ளலாம்.

- மரப்பலகைகளில் மிதக்கும் தன்மை காணப்படுவதால் அதிகமான சம்பிரதாய படகுகள் மிதத்தலுக்கு உள்ளாகும். இம்மரங்கள் புலுக்களினால் அழிவுறாமல் அல்லது சிதைவுப்படாமலிருந்தால் மிதத்தலை செயற்படுத்தும்.

- உங்கள் படகுகளில் மிதத்தலுக்கான பொருட்களை கொண்டுச் செல்வது மிக முக்கியமாகும்.

- 5 லீட்டர் அளவை உடைய பிளாஸ்ரிக் (இறப்பர்) பாத்திரம் ஒன்றை உபயோகித்து ஒரு குறிப்பிட்ட நேரம் வரை மிதக்க முடியும். இவ்வாறான பாத்திரங்கள் இரண்டை பாவிப்பது மிக முக்கியமாகும்.

- படகில் உள்ள மீனவர்களின் தொகை அதிகமென்றால் ஒவ்வொரு மீனவருக்கும் ஒவ்வொரு பிளாஸ்டிக் பாத்திரம் என்ற வகையில் படகில் கட்டி வைப்பது மிகச் சிறந்ததாகும்.


- வாகனங்களின் சில்லுகளின் (டயர்களின்) உள்பாகத்தில் உள்ள டியூப் இதற்கு மிகப்பொருத்தமாகும். ஆனாலும் அதற்கு படகில் ஒரு பெரிய இடம் தேவைப்படும். அதோடு சூரிய வெளிச்சம் மற்றும் கடல் நீரினால் இவ் டியூப் அழிந்து விடும்.

உங்களுக்கு நீர்புகா (water proof) கென்வஸ் தேடிக் கொள்ளமுடியுமானால் அதை டெக்ரோன் ஊடாக நிரப்பி மிதப்பதற்கு தேவையான உபகரணமாக தயாரித்து படகில் வைத்துக் கொள்ள முடியும். நீர் உள் போகாதபடி தயாரித்துக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய்ச் சாயம் பூசி (Oil Paint) நீர் உள்போகாதபடி பாதுகாத்துக் கொள்ள முடியும்



❖ உயிர் பாதுகாப்பு உபகரண தொகை ஒன்றை விலைகொடுத்து வாங்க முடியுமென்றால் அவைகளை பாவிப்பதன் மூலம் நீரில் மூழ்குவதை தடுத்து தலையை நீருக்கு மேல் வைத்துக்கொள்ள உதவும். பாகு புரண்டு நீங்கள் கடலில் அதிக மாச்சலுக்கு உள்ளாக வேண்டி ஏற்பட்டால் அல்லது பிளாஸ்ரிக் உபகரணம் கடலில் விழ ஏற்பட்டால் உயிர் பாதுகாப்பு உபகரணத்தை அணிந்திருப்பது மிக பொருத்தமானதாகும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கயிறு :-

- ☐ கயிறு என்பது உங்களுக்கு அல்லது உங்கள் படகின் வேறொரு அங்கத்தவரின் பாதுகாப்பிற்காக பயன்படுத்தக்கூடிய ஒரு பொருளாகும்.

- ☐ உமது படகு கவிழ நேரிட்டால் நீங்கள் படகோடு அமிழாமல் மிதக்க நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் படகோடு ஒன்றிணைந்து படகோடு மிதப்பதன் ஊடாக உங்கள் பாதுகாப்பு மற்றும் நிலைப்பாடு உறதி செய்யப்படும்.



- ➢ படகிலிருந்து வெளியே நீங்கள் விழுந்தீர்கள் என்றால் படகிற்கு ஏறுவதற்கு கயிற்றை ஏணியாக பாவிக்க முடியும்.

- ➢ விபத்துக்கு உற்பட்ட ஒருவரை காப்பாற்றுவதற்காக கயிற்றின் ஒரு முனையில் முடிச்சி ஒன்னை இட்டு கயிற்றை கடலுக்கு வீச முடியும்.

ஆனாலும் உங்களிடம் பழைய கயிறு காணப்பட்டால் அவைகளை கரையிலேயே வீசிவிட வேண்டும். காரணம் அவைகளை கடலில் வீசும் போது அவைகள் படகில் சிக்குண்டு விபத்துக்களை ஏற்படுத்தலாம். முக்கிய விடயம் என்னவென்றால் நல்ல கயிறு நீரில் மிதப்பதால் நன்மை மற்றும் தீமை இரண்டும் இடம் பெரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்

"திடீர் விபத்தின் போது குடிப்பதற்கு
நீர் அவசியம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் என்பது ஒரு நண்பனை போன்றே ஒரு விரோதியுமாகும். படகிற்குள் நீர் காணப்பட்டால் அது பிரச்சினையாகும். ஆனாலும் கடலில் வைத்து அருந்துவதற்கு நீர் கட்டாயம் தேவை என்றபடியால் ஒரு கனம் விரோதி உங்கள் நண்பனாக மாறுகிறது.

- படகினுள் உள்ள நீரை அகற்றுவதற்கு ஏதாவதொரு பாத்திரத்தை அல்லது ஏதோவொரு உபாய வழியைப் பயன்படுத்த முடியும்.



- சில படகுகளை வேகமாக இயக்கச் செய்வதன் மூலம் நீரை அகற்றும் உபாய வழியாக்கலாம். படகின் மரக்குற்றியின் அடியில் காணப்படும் துவாரங்களால் அது மேற்கொள்ளப்படுகிறது. கடலில் இருந்து தொழில் செய்யும் போது இத்துவாரங்களை மூடுவதற்கு நினைவூட்ட மறவாதீர்கள். இல்லாவிடின் படகிற்குள் நீர் நிறைந்து காற்று வீசும் போது படகு புறலலாம்.

- உங்களது ஒவ்வொரு கடல் பயணத்தின் போதும் தேவையானளவு நீரை கொண்டு செல்வதற்கு மறவாதீர்கள். மிக குறுகிய பயணமானாலும் அவ்வாறு செய்ய மறவாதீர்கள். ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 2 லீட்டர் அளவு நீரை கொண்டுச் செல்வதற்கு யோசனையாயிருங்கள். அதோடு காற்று படாத வண்ணம் விசுகோத்து டின் ஒன்றையும் எடுத் செல்ல மறவாதீர்கள். நீங்கள் தொடர்ந்து உணவுகளை உட்கொள்வதும், நீரை அருந்துவதுமாக இருந்தால் மாச்சலையும், உடல் உலைச்சலையும் குறைத்துக்கொள்ள முடிவதோடு விபத்து ஏற்படும் அவதான நிலையையும் குறைத்துக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலர்தல் :-

உடலில் உள்ள நீர் வெளியேறி உடல் காயும் போது சிறு நீரகத்தில் பலவீனம், தலைவழி மற்றும் உடல் மாச்சல் நிலையை ஏற்படுத்தும்.

- உங்கள் நீர் பாத்திரத்தில் உள்ள நீர் முடிந்திருந்தால் ஒருமுறை உங்கள் சிறுநீரைகுடிப்பதன் மூலம் தாகத்தை தீர்த்துக் கொள்ளலாம்.
- அப்படியும் இல்லாவிட்டால் ஒரு கிளாஸ் கடல் நீரையும் அருந்தலாம். உங்களிடம் பிளாஸ்டிக் பாத்திரம் இருந்தால் மழை நீரை கூட சேர்த்துக்கொள்ள முடியும்.

"சிறு மீனவர்கள் மற்றும் பாரம்பரிய மீனவ மக்களது ஆழ்கடல் பாதுகாப்பு தொடர்பான கலாச்சாரம் ஒன்றை உருவாக்குவதற்கான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்கின்ற கல்வி, பயிற்சி மற்றும் அறிவை வளர்க்கும் வேலைதிட்டங்களை தயாரித்து அவைகளை நடைமுறைப்படுத்தும்படி நிர்தேசிக்கின்றோம்."

பாரம்பரிய மற்றும் சிறுகருவி மீனவர்களது ஆழ்கடல் பாதுகாப்பு தொடர்பான சென்னை வெளியீடு
2001 ஒக்டோபர் 12
வங்காள விரிகுடா உள்ளக அரச அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் ஆவியாக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ் கடலில் நீங்கள் விபத்துக்குள்ளாகி, பாதுகாப்பான இடத்தை அடைந்ந பின்,

மணல் நிறைந்த மற்றும் மரங்கள் நிறைந்த இடத்தை தேடிக்கொள்ளுங்கள். அங்கே 50 செ.மீ ஆழமான குழி ஒன்றை தோண்டிக்கொள்ளுங்கள் அக்குழியினுள் மர இலைகளை அல்லது புற்களை இடுங்கள் அதிகமான அளவு இடுவது சிறந்தது. குழியினுள் நீரை சேகரிப்பதற்கு பாத்திரம் ஒன்றை வைத்து, அது அசையாத வண்ணம் கற்களையிட்டு இறுக்கவும். பிளாஸ்டிக் பை ஒன்றினாலேயே இதை மூடிவிடவும்.

சிறு கல்லை பிளாஸ்டிக் பை மேல் வைக்கவும். அதனால் பிளாஸ்டிக் பையை ர அல்லது ஏ முறைக்கு மேல் பக்கத்தை தயார்படுத்தவும்.

மர இலைகளினால் மற்றும் நீரினால் ஆவியாக்கம் செய்யப்படும் நீர் பொலிதீன் பையின் மேல் பக்கம் தேங்கி உள்ளேயிருக்கின்ற பாத்திரத்தில் சேரும்.





நீங்கள் விபத்தொன்றில் சிக்குண்டு தீவு ஒன்று அல்லது பாதுகாப்பான இடத்தை அடைந்ததும் உங்களுக்கு தேவையான நீரை இயற்கையிலிருந்து பெற்றுக்கொள்ள இது ஒரு உபாய வழியாகும். சூரிய ஒளியின் ஊடாக மரங்களிலிருந்து ஆவியாக்கம் செய்யப்படும் நீரை சேமிப்பது இதன் மூலதர்மமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான ஒளிக் குறியீடு
# (வெளிச்சக்குறியீடு)

"விபத்து ஒன்றின் போது பாவிக்க வேண்டிய ஒளிக் குறியீடு"







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளை காண்பதன் ஊடாக,

ஆழ்கடலில் ஒளிக்குறியீடுகளை பாவிக்கும் முறை தொடர்பான சர்வதேச சட்டதிட்டங்கள் உள்ளன. ஒளியின் (வெளிச்சத்தின்) ஊடாக உமது வலைக்கு மீன்களை வரவழைத்துக்கொள்வது மாத்திரமல்லாது, இரவு நேரங்களில் வேறு படகுகள், கப்பல்களுக்கு உமது படகை கண்டுகொள்ளவும் கூடியதாயிருக்கும்.

**சர்வதேச ஒளிக்குறியீடு சட்ட்திட்டங்களுக்கு ஏற்ப,**

- சூரியன் மறைந்து சென்ற நேரம் தொட்டு மீண்டும் சூரியன் தோன்றும் வரை ஒளி ஏற்றி இருக்க வேண்டும். படகிற்கு உறுதிசெய்கின்ற (அனுமதிக்கின்ற) ஒளியைத் தவிர வேறு எதையும் பாவிக்க முடியாது.
- சிவப்பு நிற ஒளி (வலது பக்கம்)
- பச்சை நிற ஒளி (இடது பக்கம்)
- வெள்ளை நிற ஒளி




- படகின் நங்கூரத்தை வெள்ளை நிற வெளிச்சத்தால் மாத்திரமே காட்ட வேண்டும்.
- படகின் சக்தியை, எண்ணைய் குறைதலை சகல நிற வெளிச்சங்கள் ஊடாகவும் காட்ட முடியும்.
- விசேட விதமாக மீனவ படகுகளுக்கு long line ஐ பாவித்தால், வலைக்கு பாவிக்கின்ற வெளிச்சத்தின் ஊடாக கடலில் பயணம் செய்யும் படகுகளுக்கு உமது வலையை விரித்திருக்கின்ற திசை தெரியும்.
- சகல திசைகளுக்கும் தெரியும் வண்ணம் மேலே பச்சை நிற வெளிச்சத்தோடு அதற்கு கீழே வெள்ளை நிற வெளிச்சத்தை நேராக பூட்டி இரவு நேரங்களில் எறிய விட வேண்டம்.
- டோலர் படகில் அல்லாமல் வேறு படகுகளில் இரவு நேரம் மீன் பிடிக்கும் போது, சகல திசைகளுக்கும் தெரியக்கூடியதாக நேர்திசையில் மேலே சிவப்பு நிற வெளிச்சமும், அதற்கு கீழே வெள்ளை நிற வெளிச்சமும் எறிய வேண்டும்.


என்றாலும், இதை தவிர உங்களை கண்டறிய வேண்டியவைகள் இன்னும் பல உள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறியீட்டு வெளிச்சத்தை (ஒளியை) தயாரித்தல்

"திடீர் விபத்தின் போது பாவிப்பதற்காக"






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெறிப்பு உபகரணங்கள்:-**

ரேடார் தெறிப்பின் மூலம் விசாலமான படகுகளுக்கு உங்களை கண்டறியச்செய்ய முடியும். இவைகளை பழைய தகரப் பேணி (டின்) ஊடாக செய்ய முடியும். ஆனாலும் அவைகள் வர்ணம் பூசப்படாத உலோகங்களாக இருக்க வேண்டும்.

இரு தகரத்துண்டுகள் மத்தியில் சதுரவடிவில் ஒரு பகுதியை வேறாக்குதல்.




- ➢ பிரகாசமான வர்ணங்களிலான உடைகளை உடுத்தியிருத்தல் அல்லது பாய்மரத்தை பிரகாசமான வர்ணத்தால் தயாரித்திருத்தல் போன்றவைகளினாலும் விசாலமான படகுகள் அல்லது கப்பல்களுக்ளு உங்களை நன்றாக கண்டுக்கொள்ளச் செய்ய முடியும்.

- ➢ மிதப்பதற்காக நீங்கள் உபயோகிக்கும் பொருட்களையும் பிரகாசமான நிறங்களால் தயாரித்து வைக்கவும். அதனூடாக கடல் நிறத்தை விட உங்கள் நிறம் தெளிவாக வேறுபட்டதாய் காட்டுவதோடு உங்களையும் தெளிவாய் கண்டுக்கொள்ளச் செய்யும். (உதா:- சிவப்பு, செவ்விள நிறம், ரோஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சகல சந்தர்ப்பங்களிலும் மின் குமிழ் (டோச்) ஒன்றை மற்றும் மின் கலங்களை எடுத்துச் செல்ல மறவாதீர்கள். முடியுமானால் நீரில் பாவிக்க கூடிய மின் குமிழ் ஒன்றை எடுத்துச் செல்லுங்கள். அவ்வாறானதொன்றை விலைகொடுத்து வாங்க முடியாவிட்டால் மின் குமிழை இறப்பர் பொருட்களால் ஆவணப்படுத்துங்கள்.

- விபத்தொன்றின் போது மற்றவர்களுடைய அவதானத்தை பெறும் பொருட்டு கண்ணாடி ஒன்றை அல்லது கண்ணாடி போன்ற தன்மை உடைய வேறு பொருள் ஒன்றை பாவிக்கவும். (டின்)

- ஏனையவர்களுக்கு கேட்க கூடிய மற்றும் நன்கு ஊதக்கூடிய விசில் (ஊதல்) ஒன்றை பயன்படுத்தவும். இதை இரவு நேரத்தில் ஊதும் போது 3-5மீ தூரம் வரை கேட்க வேண்டும். இதை இரவு உங்கள் சொந்த பாவனைக்காக பயன்படுத்துகின்ற பொருட்களோடேயே வைத்துக்கொள்ளவும்.

- அவசர நேரத்தில் பயன்படுத்தக்கூடிய ஏ தோற்றமுடைய கொடி ஒன்றை வீசுகின்ற கோணி (சாக்கு) ஒன்றின் மேல் நிறம் பூசி அல்லது ஒளி நாடா துண்டுகளை ஒட்டுவதன் மூலம் தயாரித்துக் கொள்ளுங்கள்.


- கருப்பு நிற சதுரம் அல்லது வட்டம் ஒன்றையோ, செவ்விள நிற கென்னஸ் துண்டு ஒன்றை படகில் காட்டுவதன் ஊடாக வானத்திலிருந்து ஏற்படும் விபத்துக்களை அறிந்துக்கொள்ள முடியும்.

- உம்மால் விலைக்கொடுத்து வாங்க முடியுமானால் திடீர் ஆபத்து ஒன்றின் போது தீ சுவாலைகள் ஊடாக குறியீட்டு வெளிச்சத்தை காட்டுகின்ற உபகரணம் ஒன்றை பெற்றுக்கொள்ளலாம். ஆனாலும் அவ்வாறு வாங்க முடியாத போது கீழ்க்காணப்படும் முறையை பாவித்து அதை முடிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு தகரப் பேணி (டின்)களைப் பயன்படுத்துங்கள். அதில் ஒன்று அடுத்ததில் நுழையக் கூடியதாக இருக்க வேண்டும்.




- இரு சிறிய தகரப் பேணிகளில் தேங்காய் தும்புகளை இட்டு நிறப்புங்கள். அவ்வாறு இல்லாவிட்டால் தீ பிடிக்காமல் புகையை மட்டும் வெளியிடும் வேறு ஏதாவது தும்பு (சருகு) பாவிக்கவும்.

- இவ்வுபகரணத்தினுள் எந்நேரமும் தீ பெட்டியை இட்டு வைக்கவும். ஆகவே அதை எப்போதும் உங்களிடம் வைத்துக்கொள்ள முடியும்.

- இவ்உபகரணத்தின் பயன்பாட்டை அனுபவித்து பார்க்க தேங்காய் தும்பு சிறதளவு அல்லது அதிகமாக பாவித்து மிகவும் பயன்தரக்கூடியதாக புகை வெளியேறும் அளவுக்கு அதை நிர்மாணிக்க முயற்சித்துப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டித்தல். (ஆலோசனை)

- இவ்வுபகரணத்தினால் தீ பிடிக்கக் கூடாது, புகை மாத்திரம் வெளியேற்றப்பட வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தீ பிடிக்க ஆரம்பித்தால் கடல் நீரைக்கொண்டு அனைத்து புகை வெளியேறும் வண்ணம் தயாரிக்கவும்.

- மிகவும் பொருத்தமானதாக உபகரணத்தை தயாரிப்பதற்கு முன்பதாக பல முறை அதை பரிசோதித்து பார்க்க வேண்டும்.

- இவ் குறியீட்டு முறையை பாவிப்பதன் ஊடாக பகல் நேரங்களில் பெரிய படகுகளின் மற்றும் விமானங்களின் அவதானத்தை உங்கள் பக்கமாக திருப்ப முடியும். பதில் ஒன்று கிடைக்காத போது உங்கள் தேங்காய் மட்டைகளில் உள்ள எண்ணைய் முடிவதற்கு முன்பு மற்றைய டின்னினால் விரைவில் மூடுங்கள்.

மீனவர்கள் உகந்த பாதுகாப்பு முறைகள் மற்றும் தேவைகளை கையாளுகின்றார்களா என்பதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசிற்கு உள்ளது. இத்தேவைகள் சர்வதேச உடன்படிக்கைகள்,சர்வதேச ரீதியில் உடன்பாட்டிற்கு வந்த திட்டங்கள் மற்றும் தொண்டு வழிகாட்டிற்கு ஏற்ப தயாரிக்க வேண்டும். சிறு மீனவ படகுகளுக்காக இவ்வாறான முறைமைக்கேட்ப அரசால் தகுந்த பாதுகாப்பு முறை மற்றும் தேவைகளை அமுழ்படுத்தி நடைமுறைபடுத்த வேண்டும். இதற்கு காரணம் மேற்கூறப்பட்ட உடன்படிக்கைகளால் சிறு படகுகளுக்கு பாதுகாப்பு கிடைக்காமையாகும்.
(8:2:5 உறுப்புரை)

மீனவ செயற்பாடுகள்: கொடியையுடைய அரசுகளது பொறுப்பு பொறுப்புமிக்க மீனவ தொழிலுக்கான ஒழுங்கு விதிமுறைகள். உணவு மற்றும் விவசாய அமைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பு (தீ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அதிகமான பாரம் பரிய மீனவர்கள் இயந்திர படகுகளை பாவிக்கின்றார்கள். இதற்காக பயன்படுத்துகின்ற எண்ணெய்கள் வெகு விரைவில் தீ பற்றக்கூடியதாக உள்ளதோடு அதிகமானவைகள் வெடித்துச்சிதறும் தன்மையுடையது.

- படகினுள் தீப்பிலம்புகளை இல்லாதுச்செய்ய அல்ல அவ்வாறு அபாய வேலைகளில் முகம் கொடுக்கும் முறைப்பற்றி தெரிந்திருப்பது மிக அவசியமாகும். மிக குறைந்தளவிலாவது எண்ணெய் சிதைந்து காணப்பட்ட தீ பற்றும் தன்மை அல்லது வெடிக்கும் தன்மைக்குள்ள அபாயம் மிக அவதானத்திற்குரியது.

- வளி மற்றும் பெற்றோல் வெடிக்கும் தன்மையுடையவைகள். எண்ணெய் சிதைந்திருக்கின்றதை கண்டால் உடனே உங்கள் புகைபிடித்தலை நிறுத்தங்கள். டீசல் மிக விரைவில் தீ பற்றக்கூடியது. அவ்வாறான சிதைவு காணப்பட்டால் மேற்கூறியவாறே உங்கள் புகைபிடித்தலை நிறுத்துங்கள், வீசுங்கள்.

- பெற்றோல் அல்லது டீசல் கசிந்த பிறகு நீரில் மிதக்கும். ஆகவே படகினுள் மற்றும் படகின் சுற்றுப்புறத்தில் எண்ணெய் படலம் ஒன்று இருப்பதை மறந்து விடாதீர்கள்.


- படகில் புகை வெளியேறுவது சாதாரண வளியை (காற்றை) விட மிக அதிகமாகும். ஆகவே படகில் அவ்வாறான நிலைமை தொடர்பாக கவனமாக இருங்கள்.

- இவ்வாறு வெளியேறுகின்ற புகை படகில் கீழ் புறம்பாக திரண்டு காணப்படுவதோடு, அதை உங்கள் தெளிவாக பரிசோதித்தறிய முடியாது. இறுதியில் அவைகள் பலமாக வெடித்துச்சிதற முடியும். அதனூடாக உங்களை போதைக்கு உட்படுத்தவும் மற்றும் சுய சிந்தனையில்லாமல் செய்யவும் முடியும். ஆகவே வளி செல்லக்கூடிய இயந்திர அறை சாலச்சிறந்தது.

- சகல படகுகளிலும் தீ அணைக்கும் உபகரணம் அவசியம். இதற்காக கயிற்றால் கட்டப்பட்ட ஒரு வாலி போதுமானதாகும். இதனூடாக கடல் நீரை பயன்படுத்தி தீயை அணைக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



➢ இதன் போது ஈரமான துவாய் (சால்வை) ஒன்று பிரயோசனமாகும். ஆனாலும் பெரியளவு தீயின் போது அது பொருத்தமற்றதாகும்.

தீயை அணைப்பதற்கு மணலை பாவிக்க முடியும். ஆனால் அதனால் உமது இயந்திரம் சேதமடையும்.

எண்ணெய் கொண்டுச்செல்வது எந்நேரமும் ஒரு பிரச்சினையாகும். அதிகமான இயந்திர படகுகள் கடலுக்கு எண்ணெய் கொண்டு செலவதால் அது மிகவும் அவதானத்திற்குறிய செயற்பாடாகும். இயந்திரத்திற்கு பாவிப்பதன் ஊடாக எண்ணெய் சிதையும் அவதானத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பாதுகாப்பிற்காக பூரண திட்டம்.

"கடலில் உங்கள் உயிராபத்திற்கான அபாயத்தை குறைத்துக்கொள்வோம்."





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ அதிகமான வீடுகளில் எண்ணெய் சேமித்து வைக்கப்படுகிறது. வீடுகள் மரங்களால் செய்யப்பட்டுள்ளமையினாலும், சமைப்பதற்கு விரகை பாவிப்பதனாலும் அபாயத்தன்மைகள் காணப்படுகிறது. உங்கள் குடும்பத்தை அல்லது வீட்டை அபாயத்திற்கு உள்ளாக்காதீர்கள்.

➢ சகல எண்ணெய் களஞ்சியங்களையும் திறமையக மூடி வீட்டிலிருந்து சற்று தொலைவில் வையுங்கள். சிறு சுவர்களை கட்டி எண்ணெய் சிதைவின் ஊடாக கடலுக்குச் செல்வதை தடுத்துக்கொள்ளுங்கள். இவ்வாறான சுவர்களை கட்டாமல் இரவு நேரங்கள் எண்ணெய் கசிந்து காணப்படும் போது புகைபிடித்தலுடன் நீங்கள் அப்பிரதேசத்தில் நடமாடும் அது உங்களையும், அப்பிரதேசத்தின் ஏனைய மக்களையும் அபாய நிலைக்கு உட்புகுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பர்கள் மற்றும் குடும்பத்தோடிணைந்த திட்டம்.

"எமது உயிரின் பொறுப்பை அயலவர்களோடு பகிர்ந்து கொள்வோம்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலில் ஈடுபடும் போது எந்நேரமும் இருவராக செயற்படுங்கள். உங்களுக்கு விருப்பமான மற்றும் நம்பிக்கையான நண்பர்களை அறிந்துக்கொள்ளுங்கள். நீங்கள் கடலில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை பார்த்துக்கொள்ளும் தூரத்தில் தொழில் செய்வதற்கு பேசி திர்மானித்துக் கொள்ளுங்கள். வெவ்வேறுபட்ட உபாயங்களைப் பயன்படுத்தி (உதாரணம் :- வெளிச்சங்கள், குழல் ஊதல்) ஒவ்வொருவருக்கிடையில் தொடர்பாடலை வைத்துக்கொள்ளுங்கள்.

- நீச்சல் செய்பவர்கள் இம் முறையை படி முறை (BUDDY SYSTEM) என அழைப்பார்கள். அவர்கள் ஏதோ ஒரு விபத்தில் மாட்டிக்கொண்டால் திடீரென ஏற்படுகின்ற உயிராபத்து மற்றும் இறப்பை கூட வெற்றி கொள்ளலாம்.

- உங்கள் குடும்பத்திலுள்ளவர்களுக்கு நீங்கள் தொழிலுக்குச் செல்லும் பிரதேசம், தொழில் செய்ய நினைக்கும் காலம், உங்கள் திட்டம் போன்றவைகள் தொடர்பாக அறிவுறுத்துங்கள்.

"திடீர் மற்றும் முக்கிய விடயமாக கருதி, பாரம்பரிய மற்றும் சிறு மீனவர்களின் ஆழ்கடல் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு செயற்பட வேண்டும்"

பாரம்பரிய மற்றும் சிறு மீனவர்களின் ஆழ்கடல் பாதுகாப்புத் தொடர்பான சென்னை வெளியீடு.
2001 ஒக்டோபர் 12
வங்காள விரிகுடா நிகழ்ச்சித்திட்டம் - சர்வதேச அரச அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மேல் கூறப்பட்ட திட்டங்களுக்கேற்ப செயற்பட முயற்சி செய்யுங்கள்.

- நீங்கள் கடலுக்குச் சென்று வர தாமதித்தால் நீங்கள் சென்றுள்ள திசை அவர்களுக்கு ஏற்கனவே தெரியும். ஆகவே பொன்னான நேரத்தையும், உங்கள் வாழ்வின் அபாயத்தையும் தீர்த்துக்கொள்ள முடியும்.

- உங்கள் படகின் இலக்கத்தை சரியாக குறித்துவையுங்கள். ஆகவே உம்மை தேடுகின்ற நபருக்கு உமது படகை இலகுவாக கணடறிய அது ஏதுவாயிருக்கும் அல்லது உம்மை நெருங்கிய ஊரிலுள்ள மீனவர்களுக்கும் உம்மை அறிந்து கொள்ள ஏதுவாயிருக்கும். இதற்காக அரசு அனுமதித்துள்ள பிரகாசமான நிறத்தை பயன்படுத்துங்கள்.

கடலில் விபத்தில் சிக்குண்டவர்களை பாதுகாக்கும் செயற்பாடும், மீனவ செயற்பாடும் ஒன்றிணைந்திருக்க வேண்டும். இதன் போது அரசுகள் தானாக அல்லது வேறு அரசுகளோடு அல்லது தகுந்த சர்வதேச அமைப்புக்களோடு ஒன்றிணைந்த செயற்திட்டமொன்றை தயாரித்துக்கொள்ள வேண்டும். (8:1:6 உறுப்புரை)

மீனவ செயற்பாடுகள்
சகல அரசுகளினதும் கடமை :- உறுதிமிக்கதான மீனவ தொழிலுக்காக ஒழுங்கு விதிமுறைகள்.
உணவு மற்றும் விவசாய அமைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபகரணம் மற்றும் உதிரிப்பாகங்கள்


"பொருத்தமான உபகரணங்களை பயன்படுத்துவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமான மரணங்களுக்கு காரணம் படகில் உள்ள இயந்திரம் செயற்படாமை ஆகும். சரியான முறையில் இயந்திரம் தொழிற்படாமையினால் மீனவர்கள் அடிப்பட்டுச் செல்கின்றனர்.

- இயந்திரத்தின் உதிரிப்பாகங்களை தொடர்ந்து கொண்டுச் செல்லுங்கள். குறைந்தது சுத்தியல், பலகை, எண்ணெய், வயர், (மின்கம்பி) ஹோஸ் குழாய் ஒன்று, எண்ணைய் குழாய் இருக்க வேண்டும்.



- இயந்திரத்தில் ஏதாவதொரு கோலாறு ஏற்பட்டால் அதை திருத்தி ஆபத்தில்லாமல் வீடு வந்துச் சேர, கடல் பயணத்தின் போது இவைகளைக் கொண்டுச் செல்லுங்கள். அதிகபட்ட துடுப்பு, சவல் போன்றவைகளை வைத்துக் கொள்வதன் மூலம், இயந்திரம் சேதத்திற்குள்ளாகும் போது படகை கரைச் சேர்க்க முடியும். இதுவரை நீங்கள் துடுப்பை பாவித்து பழக்கப்படாதவராக இருந்தால், அதற்கான பயிற்சி எடுப்பது மிக முக்கியம். அதோடு மிக மோசமான சூறாவளியின் போது உமது படகை கரைச்சேர்க்க பழகிக்கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➤ இயந்திரத்தில் தேய அல்லது பலமற்ற பாகங்களை அகற்றி புதிய பாகங்களை இட்டு அவதானத்திற்குள்ள அனர்த்தங்களை தடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் உயிரை பணயம் வைத்து பணம் சேர்க்க துடிப்பது மிக முட்டாள்தனமான செயலாகும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மீனவர்களின் ஆழ் கடல் பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகள் மிக பலவீனம் உடையதாகும் என்பதை புரிந்து கொள்வோம்.
பாரம்பரிய மற்றும் சிறு மீனவ ஆழ்கடல் பாதுகாப்பிற்கான சென்னை வெளியீடு
2001 ஒக்டோபார் 12

வங்காள விரிகுடா நிகழ்ச்சித்திட்டம் : சர்வதேச அரச அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவீனமுடைய இயந்திர சூத்திரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக உயிராபத்துக்கள் மற்றும் விபத்துக்குள்ளாகுதல் இயந்திரங்களின் பலவீனத்திலாகும். சில இயந்திரங்கள் விசேட விதத்தில் பலவீனமுடையது. பணம் கொடுத்து வாங்கும் இயந்திரம் உறுதிமிக்கதா என உறுதி படுத்தி வாங்குங்கள்.

- நீண்ட உடைகள் மற்றும் நீண்ட முடிகளோடு (மயிர்கள்) இருப்பதை நிறுத்துங்கள். நீண்ட உடை, தலையில் அணியும் துணிகள் இயந்திரங்கள் சிக்குவதற்கு அவகாசம் உண்டு. என்ஜின் திறந்திருக்கும் இந்நிலைமை விரைவில் ஏற்படும்.

- நீண்ட கூந்தல் இயந்திரத்தின் சுற்றுச்சில்லில் சிக்குவதற்கான சந்தர்ப்பம் அதிகம். நீங்கள் படகிலிருந்து வீசப்பட்டு கடலில் விழும் போது உபகரணங்கள் கூந்தலில் சிக்குர வாய்ப்புண்டு.

- நீங்கள் கடலிலிருந்து விழுந்தவுடன் படகு உங்கள் மேல் பயணித்து இயந்திரத்தின் சுற்றுச்சில்லில் அகப்பட வாய்ப்புண்டு. இது மிகவும் அபாயகர தன்மையாகும்.

- ஆனாலும் உங்கள் படகிற்கு இழுக்ககூடிய கயிறு ஒன்று காணப்பட்டால், நீர் படகையை அடையும் திசையை கண்டறியலாம்.

- எல்லாவிதமான ஆபத்தான உபகரணங்களையும் விசேடவிதமான சுற்றுச் சில்லு, துணி துண்டு போன்றவைகளை வயர்களிலான பெட்டியால் மூடிவையுங்கள் இதனூடாக இயந்திரத்தை குளிர்ச்சியூட்டும் வாயுவை அளிப்பதோடு, உங்கள் உடல் பாகங்கள், உங்கள் உடை இயந்திரத்தில் சிக்குவதை தடுக்க முடியும்.

- நீங்கள் வின்சஸ் (Winchens) பாவித்தீர்களானால், அங்கே அவசர நிறுத்தட் பொத்தான் ஒன்றை இயந்திரத்திற்கு வெளியில் பொறுத்த செயற்படுங்கள். அதனூடாக அவசர தேவையின் போது படகில் உள்ள ஏனையவர்களுக்கு வின்சஸை செயலிழக்கச் செய்ய முடியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சகல படகுகளிலும் சகல இயந்திரங்களுக்கான பூரண நிறுத்தட் பொத்தான் ஒன்று பொறுத்தப்பட்டிருக்க வேண்டும். (Dead stop button) அதனூடாக முழு படகையும் ஒரே நேரத்தில் நிறுத்த முடியும்.

- அதே போல் நீங்கள் வின்சஸ் பாவித்தீர்கள் என்றால் கயிற்றில் அல்லது அதற்கு ஒத்ததில் உட்கார வேண்டாம். அதனூடாக இயந்திரத்தில் ஏதாவது கோலாறு ஏற்பட்டு கயிறு உங்கள் காலில் சுற்ற நீர் விழக்கூடிய நிலையை இல்லாதொழிக்கலாம்.

"மீனவ செயற்பாடுகள் செயற்படுத்தப்படுவது ஆபத்தான சூழலில் போன்றே இயந்திரங்களில் திட்டத்திலும், உற்பத்தியின் மற்றும் உபகரணங்களின் பலவீனத்திலுமானபடியினால் தொடர்ந்து அவைகளின் செயற்பாடுகள் உயிரிழக்கும் சந்தர்ப்பங்கள் உள்ளது என்பதை உணந்துகொள்வோம்"

பாரம்பரிய மற்றும் சிறு மீனவர்களின் ஆழ்கடல் பாதுகாப்புக்கான
சென்னை வெளியீடு
2001 ஒக்டோபர் 12
வங்காள விரிகுடா நிகழ்ச்சித்திட்டம் : சர்வதேச அரச அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானிலை

"மீனவராகிய எமக்கு வானிலை தொடர்பான பூரண அறிவு இருப்பது மிக முக்கியமாகும்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானிலை :-

- அனுபவம் நிறைந்த பழைய மீனவர்களுக்கு வானிலை தொடர்பான அறிவு உண்டு. அதிகாலை மேகம் இளம் ரோஸ் நிறத்தில் அல்லது மேகம் பஞ்சு போன்று அல்லது வைரம் போன்று காணப்பட்டால் புயலுடனான நாள் என்பதை அவர்கள் அறிவார்கள்.

- மாலை வேளையில் காணப்படும் - மழை தொடர்பான அறிவும் இவர்களுக்குள்ளது.

- ஆனால் தற்காலத்தில் அதிகமானவர்கள் இவ்வாறான ஆண்களிடம், பெண்களிடம் கற்றுக் கொள்வது கிடையாது.

- அதே போன்று நவீன உலகத்தில் ஏற்படுகின்ற வெவ்வேறுபட்ட அழுத்தங்கள் மற்றும் வளி மண்டலத்தில் ஏற்படுகின்ற மாற்றத்தினாலும் வானிலையில் மாற்றங்கள் ஏற்படுகிறது. இவ்வாறான பழைய அடையாளங்கள் தற்காலத்தில் இன்னமும் மதிக்கப்படுவது கிடையாது.

- நீங்கள் கடலிலிருந்து தூரத்தில் வாழ்ந்தீர்கள் என்றால் வானிலை அறிக்கையைப் பெற்று அது தொடர்பாக அறிந்திருக்க வேண்டும். இவ்வாறான தகவல் தெரியாமல் கடலுக்குப் போய் புயல்காற்றினால் 1000 இற்கும் அதிகமானோர் இந்தியாவில் மட்டும் இறந்துள்ளனர்.

- ட்ரான்சீஸ்டர் ரேடியோ (வானிலை) மோசமான வானிலைக்கு எதிரான உங்கள் பாதுகாப்பாகும். கடலுக்குச் செல்வதற்கு முதலாக அதற்கு செவிமடுத்தல் போன்றே அதை உங்களோடு எடுத்துச் செல்வதும், வானிலை அறிக்கையை பெற்றுக் கொடுக்கும் வானொலி சேவைகளுக்குச் செவிக்கொடுப்பதும் சாலச்சிறந்தது.

- கூடுதலான மின் கலங்களை உங்கள் கையிருப்பில் வைத்திருப்பதன் ஊடாக தொடர்ந்து வானொலியை செயற்படுத்த உறுதியாயிருங்கள்.

- மேற்கூறப்பட்ட அனர்த்தததிற்கு பின்பு இந்தியாவின் தென் பகுதி பிரதேச மீனவர்கள் ஒன்றுகூடி கணணி ஒன்றை விலைக் கொடுத்து வாங்கியுள்ளார்கள். அதைப் பயன்படுத்தி வானிலை தொடர்பான அறிக்கையைப் பெற்றுக்கொண்டு கடலுக்கு போவதற்கு முன்பதாக ஆய்வு செய்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவர்கள் வானிலை அறிக்கையை ஆய்வு செய்ய பழகிக் கொண்டதனால் கடல் கொந்தளிப்பு தொடர்பாக வரைப்படத்தின் உதவியுடன் ஒரு முடிவுக்கு வர அறிவை மேம்படுத்திக் கொண்டார்கள்.

- மிகவும் பொருத்தமான முறை என்றால் இரு வழி வானொலி உபகரணத்தை பயன் படுத்தலாகும். (Two Way Band Radio)

- அதனூடாக கரையில் உள்ள மத்திய நிலையத்தின் தகவல்களை பெற்றுக்கொள்வதோடு, விபத்தொன்றின் போதுதான் இருக்கும் இடம் மற்றும் தனக்கு நேர்ந்துள்ளதை அவ் மத்திய நிலையத்திற்கு அறியப்படுத்தவும் முடியும்.

- மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவ்வாறான உபகரணங்களை விலைக்கொத்து வாங்கவும், தகவல் பரிமாற்று நிலையம் ஒன்றை உருவாக்குவதற்கும் நிதி சேகரிக்க முடியும்.

- மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் தண்டனை வரி பணங்கள் போன்றவைகளை இந்நிதியை கட்டியெழுப்ப உபயோகிக்க முடியும்.

- சில மீனவர்களுக்கு தமது இறங்குதுறையை நோக்கி வருவதற்கு மாளிமா உபகரணம் ஒன்று தேவைப்படுகிறுது. தற்காலத்தில் அநேகமான மீனவர்கள் இதை எடுத்துச் செல்கின்றனர்.

"எம் சகோதர மீனவர்களின் வாழ்வை பாதுகாக்க நாம் ஒன்றிணைவோம். உலகின் அநேக அமைப்புக்கள் எமது பாதுகாப்பு தொடர்பான அக்கறையை செலுத்தியள்ளன. அவர்களின் வெளியீடுகளில் அவைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவைகளை நடைமுறைப்படுத்திக்கொள்வதன் கடப்பாடு எம் அனைவருக்கும் உள்ளது. ஏனென்றால் எமது வாழ்வின் பெறுமதி எமக்கே உள்ளது"

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிக்கை தயாரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினை மற்றும் அனுபவங்களின் பாரதூர நிலையை நிர்வாகிகளும், அதிகாரிகளும் அறிந்துக்கொள்வதற்காக அறிக்கை வைத்துக் கொள்ளுதல் மிக முக்கியம்.

- சகல சம்பவங்களின் போதும் ஏற்படுகின்ற உயிராபத்து அல்லது காயம் போன்றே அங்கு உண்மையாகவே செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பாக அறிக்கை கொடுக்க வேண்டும்.

- இது தொடர்பாக அப்பிரதேசத்தில் உள்ள மீனவ கூட்டுறவுச் சங்கம், மீனவ பரிசோதகர் அல்லது வைத்திய நிலையம் அல்லது இப்பிரச்சினை தொடர்பாக அக்கறை காட்டுகின்ற யாருக்காகிலும் அறிக்கை கொடுக்க வேண்டும்.

- நடந்தது என்ன? எங்கு வைத்து? எப்போது? போன்றவைகளை அறிக்கை செய்வதன் மூலம் ஏதோவொரு சம்பவத்தின் சரியான சதுரம் ஒன்றை அமைத்துக் கொள்ளலாம். இத்தகவல்களை மையமாக வைத்து பிரதான பிரச்சினை மற்றும் அதை தடுப்பதற்கான சரியான முறையை கண்டறியலாம்.

உதாரணமாக அநேகமான விபத்துக்கள் ஏற்பட இயந்திர கோலாரே காரணமாக அமைகின்ற படியினால் உங்களுக்கு மோடார் தொழிநுட்பவியலாளர் ஒருவரின் உதவியோடு சரியாக இயந்திரத்தை நடத்துவது எவ்வாறு? அல்லாவிட்டால் இயந்திரத்தின் தகுதியற்ற தன்மையை அறிந்து உற்பத்தி நிறுவனத்தை மாற்ற செயற்பட முடியும்.

- ஏற்பட்ட விபத்தை சரியாக ஆய்வு செய்வதன் ஊடாக, அடுத்து ஏற்படும் விபத்தை தடுத்துக்கொள்வோம். நடந்தது என்ன? அது ஏன் நடந்தது? அதை சரியாக மற்றும் வேறுமுறையில் செயற்படுத்த வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? மேல் அனுபவத்தின் ஊடாக படித்த பாடம் என்ன? போன்றவைகள் ஊடாக இவ்வாறான விபத்துகளை தடுக்க முடியும்.

- குற்றம் கூறுதல் மற்றும் இழிவு படுத்துவதிலிருந்து விலகியிருங்கள். நாம் அனைவரும் வாழ்க்கை தொடர்பாக படித்துக் கொண்டிருக்கிறோம். ஏற்பட்ட சம்பவத்தை ஏற்றுக்கொள்வதன் ஊடாக மற்றும் ஏற்பட்ட விடயம் தொடர்பாக கேள்வி கேட்பதன் ஊடாக மீனவர்களுக்கு கற்பதற்கு மற்றும் மேலும் வாழ்க்கைக்குத் தேவையான உதவியை பெற்றுக்கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கை தயாரிப்பதற்கு முன்காட்டி :-

1. மீனவனின், மீனவர்கள் பெயர்கள் விபத்து ஏற்பட்ட நாள் (திகதி)
   1.
   2.
   3.
   4.
   5.

2. படகின் தன்மை (தோனி, தெப்பம், வள்ளம், பல்தின படகு)

3. ஏற்பட்ட விபத்தின் தன்மை :

நீரில் மூழ்கியமை
மீன் ஒன்று தாக்கியது
எண்ணெய் தீர்ந்தது
கடலில் விழுந்தது
வேறு ----------------

வேறு படகு மோதியமை
இயந்திரம் செயலிழந்தது
வலை வெட்டப்பட்டது
படகு கவிழ்ந்தது

4. விபத்திலிருந்து மீள எடுத்த முயற்சிகள்

வேறு படகுகளின் உதவியை நாடியமை
படகில் கொத்திக்கொண்டு நீந்தியமை
உதவி உபகரணங்களை பாவித்தமை
கரைக்கு அறிவித்து உதவி பெறல்
விமானம் ஒன்றின் உதவியை கோரியமை
வேறு --------------

5. விபத்து தொடர்பாக அறிக்கை செய்த நபர்கள், நிறுவனங்கள்
மீனவ பரிசோதகர்
அரச சார்பற்ற நிறுவனம்
மீனவ கூட்டுறவுச் சங்கம்
கடற்றொழில் திணைக்களம்

6. படகில் உம்மிடமிருந்த பாதுகாப்பு உபகரணம் :-

7. இதனூடாக நீர் கற்ற விசேட பாடம் :-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிபோஷனை

இப்புத்தகத்தை தயாரிக்க தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் எடுத்த முயற்சி பயனுள்ளதா என்பதை மதிப்பிட மீனவ சகோதரர்களாகிய உங்களிடம் இப்புத்தகத்தை ஒப்படைக்கிறோம். இவ் பிரதிபோஷனை எங்களுக்கு மிக முக்கியமாவது எதிர்காலச் செயற்பாடுகளின்போது அது பயன் படுகின்ற படியினாலாகும்.

சகோதர, சகோதரிகளே இதனூடாக நீங்கள் பெற்றுக்கொண்ட ஏதாவது முக்கிய தகவல்கள் இருப்பின் எமக்கு எழுத தயவு கூறுங்கள். உங்கள் வாழ்வுக்கு பக்க பலமாவதே எமது நோக்கம்.

உங்கள் அனைவருக்கும் நன்றி.
தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம்
2006 மார்கழி 15.

உங்கள் கருத்துக்களை,
தேசிய அமைப்பாளர்
தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம்,
இல 10, மல்வத்த வீதி, நீர்கொழும்பு.
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசீலனை செய்த ஏடுகள்

1. பொறுப்பு மிக்கதான மீனவ தொழிலுக்கான ஒழுங்கு விதிமுறை உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு, உரோமை 1995.

2. பாரம்பரிய மற்றும் சிறு மீனவர்களின் ஆழ்கடல் பாதுகாப்பு தொடர்பான சென்னை வெளியீடு, 2001 ஒக்டோபர், இந்தியா.

3. கடல் பயணம், மீனவ கையேடு, மீனவ வியாபிப்புச் சேவை செயல்திட்டம் 1991.

4. மீனவ தொழிலின் போது பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான இரண்டாவது சர்வதேச சம்மேலனத்தின் அறிக்கை 2003 செப்டெம்பர் 22-24 அலெக்ஸா, அமெரிக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி உதவி :- HI VOS / SHO/ NO VIB நிறுவணங்களின் அனுசரனையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய மீனவ ஒத்துழைப்பு, இயக்கம், இல.10, மல்வத்த வீதி, நீர்கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org